[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2014 ஆகஸ்ட் 7

பழங்குடியினருக்குச் சொந்தமான 7.08.59 ஹெக்டேர் நிலத்தினைக் கையகப்படுத்துவதற்காக, ஆதி திராவிடர் நலத் துறை இயக்குநரிடம் சிறப்பு அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், நில எடுப்புச் சட்டத்தின்கீழ் பிரிவு 15(2)-ன்படி, தினசரி பத்திரிகையில் அறிவிக்கை செய்யப்பட்டு, நில உரிமைதாரர்களிடம் ஆட்சேபணை இருப்பின், அவை ஆய்வு செய்யப்படும்.

அதன் தொடர்ச்சியாக, பிரிவு 15(1)-ன்படி அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டு, அதன் பின்னர், நிலத்திற்கான மதிப்பீடு நிர்ணயிக்கப்படவேண்டும். நில உரிமைதாரருக்கு நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிந்தவுடன், புறவழிச் சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்கலைக்கழகம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.

2014 ஆகஸ்ட் 7] [திரு. பி. பழனியப்பன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வசதிக்காக விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி 1990-ல் திருநெல்வேலியில் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம், 25 துறைகளையும், 64 இணைவுக் கல்லூரிகளையும் உள்ளடக்கி உள்ளது. இவற்றுள் 3 அரசு கலைக் கல்லூரிகள், 32 அரசு உதவி பெறும் தன்னாட்சிக் கல்லூரிகள் மற்றும் 29 சுயநிதிக் கல்லூரிகள் உள்ளன. இவைதவிர 4 உறுப்புக் கல்லூரிகள், 6 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரிகள் மற்றும் 19 சமுதாயக் கல்லூரிகளும், இப்பல்கலைக்கழகத்தின்கீழ் மூன்று மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

2. இப்பல்கலைக்கழகத்தில் 34 முதுகலைப் பாடப் பிரிவுகளும், 24 ஆய்வியல் நிறைஞர் பாடப் பிரிவுகளும் நடத்தப்படுகின்றன. மேலும், கடல்சார் பொருளாதாரம், உயிரி தகவலியல், குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி போன்ற சமூகத்திற்குத் தேவைப்படும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பிற பாடங்களும் நடத்தப்படுவதுடன், தொழில் நிறுவனங்களின் தேவையைக் கருத்தில்கொண்டு இப்பாடப் பிரிவுகளுக்கான பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 12 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 11 சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்றும் இயங்கி வருகின்றன. மேற்காண் கல்லூரிகளில் 6,255 மாணவர்களும், 21,534 மாணவியரும் பயின்று வருகின்றனர்.

4. பல்கலை முதுகலை துறைகள், ஆய்வியல் நிறைஞர் பிரிவுகள் மற்றும் 64 இணைவுக் கல்லூரிகளில், இவ்வாண்டு 80,791 மாணவர்கள் உள்ளனர். மேலும், சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பெண்கள் படிப்பதற்கு

[திரு. பி. பழனியப்பன்] [2014 ஆகஸ்ட் 7

வசதியாகவும் கல்விக் கட்டணச் செலவினை ஏற்கும் வகையில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. தற்போது, இந்த முன்னோடி கல்வித் திட்டமானது புளியங்குடி, சங்கரன்கோவில், கோவிந்தப்பேரி, நாகம்பட்டி, திசையன்விளை மற்றும் பணகுடி ஆகிய இடங்களில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆறு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரிகளோடு, சாத்தான்குளம், நாகலாபுரம், கன்னியாகுமரி மற்றும் கடையநல்லூர் ஆகிய இடங்களில் 4 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் இளங்கலை மற்றும் முதுகலைப் பாடப் பிரிவுகளில் மொத்தம் 5,424 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

5. கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கிவரும் கல்லூரிகள் அனைத்தும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற கல்லூரிகளாக இயங்கி வருவதால், தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக பல்கலைக்கழகம் தொடங்குவதற்கான அவசியம் ஏதும் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். புதிய பல்கலைக்கழகம் அமைப்பது தமிழகத்தினுடைய கல்வி வளர்ச்சிக்கு மிக முக்கியமானது. கடலும், மலையும் சார்ந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 விழுக்காடு கல்வி பயின்றவர்கள் இருக்கின்றனர். கேரள எல்லைப் பகுதியிலுள்ள தூத்தூர், St. Jude's கல்லூரியிலிருந்து மாணவர்கள் அவசியமாக திருநெல்வேலி மாவட்டம், அபிஷேகப்பட்டியில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகத்திற்கு செல்லவேண்டுமென்றால், 150 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. மேலும், தற்போது இருக்கக்கூடிய நிலையிலே, எந்தவொரு கல்லூரியிலும் மாணவர்கள் சேர்க்கைக்கு இடம் இல்லை. கல்லூரியில் படிக்கவேண்டிய மாணவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கல்லூரிகளில் சேருவதற்கு வாய்ப்பில்லாமல், கேரளாவில் உள்ள Pearl

2014 ஆகஸ்ட் 7] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

கல்லூரியில் சேர்ந்திருக்கின்றனர். அதுமட்டுமல்ல, மற்ற மாவட்டங்களுக்குக்கூட சென்று கல்வி பயிலக்கூடிய ** இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: உடனே உரையை முடித்துவிடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டம், கடல் சார்ந்த பகுதியாக இருக்கிற காரணத்தினால், ஒரு Marine கல்லூரி வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசிய ** என்ற வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசிய ** என்ற வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கக்கூடிய மாணவர்களுக்கு போதிய கல்லூரிகள் இல்லை. கஷ்ட நிலையிலுள்ளவர்களுக்காக அதிக கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும். ** புதிதாக கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டிய நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து பல்கலைக்கழகம் அமைக்க அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். முக்கியமாக, இந்த அரசு எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வருகின்றது. நான் அதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், நிச்சயமாக அரசு முக்கியத்துவம் கொடுத்து கல்வி வளர்ச்சி மிகுந்த எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு பல்கலைக்கழகம் அமைக்க முன்வரவேண்டுமென்று இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு, Central University அமைப்பதற்கு சிபாரிசு செய்து கொண்டிருக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதை நான் இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஆகஸ்ட் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய முதல்வராக மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே, நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கினால் மட்டும் போதாது. அந்தப் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கவேண்டும். அதே நேரத்தில் உலகத் தரத்திலான கல்வியை வழங்கவேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய நோக்கம். அந்த அடிப்படையிலேதான், கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிதைத்து, சீரழிக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒரே குடையின்கீழ் கொண்டு வந்தார்கள். அதோடுமட்டுமல்ல, நிருவாகச் சீர்கேட்டால் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை, அரசுடைமையாக்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதே நேரத்தில், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு ஓர் இடமோ, ஒரு கட்டடமோ இல்லாமல் இருந்தது. ஒரு பல்கலைக்கழகத்திற்கு இடமோ, கட்டடமோ இல்லாமல் இருக்கிறது என்று சொன்னால், என்ன நிலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். அந்த வகையிலேதான் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பாக்கம் கிராமத்தில் 10 ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அங்கே நிரந்தரக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்ற நோக்கத்திற்காக, 95 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஆகஸ்ட் 7] [திரு. பி. பழனியப்பன்]

அதோடுமட்டுமல்ல, மதுரை, திருநெல்வேலி மற்றும் இதுபோன்ற இடங்களில் இருக்கக்கூடிய அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய மண்டல மையங்களுக்கு நிரந்தர நிருவாகக் கட்டடங்கள் வேண்டும்; அந்த மையங்களுக்கு நிருவாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டும்; அங்கே இருக்கக்கூடிய உறுப்புக் கல்லூரிகளுக்கெல்லாம் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 150 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, அவற்றிற்குக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அதோடுமட்டுமல்ல, ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கவேண்டும் என்று சொன்னால், University Grants Commission நிதி கொடுக்கக்கூடிய 12(B) Status வேண்டும். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், வேலூரில், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தப் பல்கலைக்கழகத்திற்கு கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு 12(B) அந்தஸ்தைப் பெறுவதற்கான முயற்சியை எடுக்காமல் இருந்தது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வந்த பின்புதான் அந்தக் கல்லூரிக்கு 12(B) அந்தஸ்தைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பல்கலைக்கழகங்களிலே பேராசிரியர் பெருமக்கள், ஆசிரியர் பணியிடத்தை நிரப்பினால்தான் அந்த மாணவர்களுக்கு வசதியாக இருக்கும். அந்த வகையிலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க 300-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் இதுவரை நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி கட்டட வசதிகளை உருவாக்கிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், உலகத் தரத்திலான கல்வியையும் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஐந்து சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

[திரு. பி. பழனியப்பன்] [2014 ஆகஸ்ட் 7

காணொலிக் காட்சி வசதிகளுடன்கூடிய சிறப்பு வகுப்பறைகள், வெளிநாட்டுப் பேராசிரியர்களை இங்கே வரவழைத்து பயிற்சி அளிப்பது, பாடத் திட்ட விரிவாக்க மையம் உருவாக்கிக் கொடுப்பது, அயல்மொழி ஆய்வகத்தை ஏற்படுத்திக் கொடுப்பது. தொழில்முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கிக் கொடுப்பது போன்றவற்றிற்காக பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 16 கோடியே 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்திய அளவிலே 678 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. 45 மத்திய பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. மாநில Public பல்கலைக்கழகம், அதாவது, 39 State Public Universities இருக்கின்றன; 185 தனியார் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன; 129 நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் என 678 பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் இருக்கின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அதிகமாக 59 பல்கலைக்கழகங்களைக் கொண்ட மாநிலம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு மக்கள்தொகையின் அடிப்படையில் பார்த்தால், இன்றைக்கு உத்தரப் பிரதேசத்தில் 19.98 கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆனால், அங்கே மொத்தமாக 53 பல்கலைக்கழகங்கள்தான் இருக்கின்றன. பீகாரில் 10 கோடிக்குமேல் மக்கள் இருக்கிறார்கள்; ஆனால் 18 பல்கலைக்கழகங்கள்தான் இருக்கின்றன. மேற்கு வங்காளத்தில் 9 கோடிக்குமேல் மக்கள் இருக்கிறார்கள்; ஆனால் 23 பல்கலைக்கழகங்கள்தான் இருக்கின்றன. மத்தியப் பிரதேசத்தில், கிட்டத்தட்ட நம்முடைய மாநிலத்தில் உள்ள அளவிற்கு மக்கள்தொகை இருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் 59 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஆனால், மத்தியப் பிரதேசத்தில் 27 பல்கலைக்கழகங்கள்தான் இருக்கின்றன.

2014 ஆகஸ்ட் 7] [திரு. பி. பழனியப்பன்]

மஹாராஷ்டிராவில் 11 கோடிக்கு மேலே மக்கள் இருக்கிறார்கள்; ஆனால் 41 பல்கலைக்கழகங்கள்தான் இருக்கின்றன. ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தில் 13 கோடி பேர் மக்கள் இருக்கிறார்கள்; அங்கு 43 பல்கலைக்கழகங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, இந்தியாவிலேயே அதிக பல்கலைக்கழகங்கள் கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, State Universities- மாநில கட்டுப்பாட்டில் நடக்கக்கூடிய பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், அதிகமாக அதாவது, 24 பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இப்படி அதிகமான பல்கலைக்கழகங்களை உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, துறைவாரியாக நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி பல்கலைக்கழகங்கள், இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகங்கள், இதுபோன்று இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், துறைவாரியான பல்கலைக்கழகங்களை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 24 கல்லூரிகள் இருக்கின்றன. அங்கு அரசுக் கல்லூரி இல்லாது இருக்கும் நிலையை அறிந்து மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், 2011 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு கலை மற்றும் அறிவியல், உறுப்புக் கல்லூரியை வழங்கியிருக்கிறார்கள். இந்தப் பெருமை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

TRUTH ALONE TRIUMPHS

அதுமட்டுமல்ல, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு சம்பந்தப்பட்ட பட்ட மேற்படிப்பு மையம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கன்னியாகுமரியிலே உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், சென்னை பல்கலைக்கழகத்தினுடைய பட்ட மேற்படிப்பு மையம், காமராஜர் பல்கலைக்கழகத்திலே இருந்தது. அதற்குப் பின்பு அது மதுரையிலே இருக்கக்கூடிய காமராஜர் பல்கலைக்கழகமாக மாறியது. அதற்குப் பின்பு காமராஜர் பல்கலைக்கழகத்தினுடைய பட்ட மேற்படிப்பு மையம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு வந்தது; பின்பு பல்கலைக்கழகமாக மாறியது. அதற்குப் பின்பு இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அந்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய பட்ட மேற்படிப்பு மையத்தை கன்னியாகுமரியிலே உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்திலே பல்கலைக்கழகமாக மாறுவதற்கு ஒரு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றுப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்”

என்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியாருடைய சிந்தனைக்கு ஏற்ப, விலையில்லாமல் அரிசி தந்து, மக்களின் வயிற்றுப் பசியைப் போக்கி, விலையில்லா மடிக்கணினி தந்து, பல்வேறு உபகரணங்கள் வழங்கி, மாணவ மாணவியரின் அறிவுப் பசியைப் போக்கி, தமிழகத்தில் ஒரு கல்விப் புரட்சியை ஏற்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களே ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)